




# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"








Website: www.sakkraviyugam.com | PRGI:TNTAM/25/A1018 | Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 | ISSUE: 249 | 03.03.2026 | TUESDAY | MAASI : 19 | PRICE : RS.5/-

மலர் : 01 | இதழ் : 249 | 03.03.2026 | செவ்வாய்கிழமை | மாசி : 19 | விலை : ரூ.5/-


## இந்திய அணுமின் உற்பத்திக்கு யுரேனியம் வழங்குகிறது கனடா

# "ஒப்பந்தம் கையெழுத்து!"

புதுடெல்லி: மார்ச்.3-

இந்தியாவின் அணு மின்சார உற்பத்திக்கு யுரேனியம் வழங்க கனடா ஒப்புக்கொண்டுள்ளது. இதற்கான ஒப்பந்தத்தில் இரு நாடுகளும் கையெழுத்திட்டுள்ளன.

கனடா பிரதமர் மார்க் கார்னி, பிரதமர் நரேந்திர மோடியின் அழைப்பின் பேரில் அரசுமுறைப் பயணமாக கடந்த பிப்.27ம் தேதி இந்தியா வந்தார். அவரது இந்த பயணத்தின் கடைசி நாளான இன்று, பிரதமர் மோடியை புதுடெல்லியில் உள்ள ஹைதராபாத் இல்லத்தில் சந்தித்தார்.

இந்தஉ சந்திப்பின்போது, பிரதமர் மோடியும், பிரதமர் கார்னியும் இரு நாட்டு பிரதிநிதிகளுடன் இணைந்து பேச்சுவார்த்தை நடத்தினர். இந்தியா கனடா இடையேயான ஒத்துழைப்பில் இதுவரை ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை ஆய்வு செய்த அவர்கள், வர்த்தகம், முதலீடு, எரிசக்தி, முக்கிய கனிமங்கள், விவசாயம், கல்வி, ஆராய்ச்சி உள்ளிட்ட முக்கிய துறைகளில் ஒத்துழைப்பை மேலும் அதிகரிப்பது குறித்து ஆலோசனை நடத்தினர்.



இதையடுத்து, அணு மின்சார உற்பத்திக்கான யுரேனியத்தை வழங்குவது தொடர்பான ஒப்பந்தத்தில் இரு நாடுகளும் கையெழுத்திட்டன. இந்த ஒப்பந்தத்தின் கீழ், இந்தியாவுக்கு கனடா யுரேனியத்தை வழங்கும். கனிம வளத் துறையில் ஒத்துழைப்பு உட்பட பல ஒப்பந்தங்களில் இரு தரப்பும் கையெழுத்திட்டன.

பின்னர் இரு தலைவர்களும் செய்தியாளர்களிடம் பேசினர். அப்போது பிரதமர் நரேந்திர மோடி, ''பிரதமர் மார்க் கார்னியை இந்தியாவில் வரவேற்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். பிரதமராக இது அவரின் முதல் இந்தியப் பயணம். இதை நாங்கள் ஒரு முக்கிய மைல்கல்லாகக் கருதுகிறோம். கடந்த ஆண்டு கனடாவில் நடைபெற்ற ஜி7 உச்சி மாநாட்டில், அவர் என்னையும் எனது பிரதிநிதிகள் குழுவையும் அன்புடன் வரவேற்றார். இன்று அதே உளமார்ந்த நட்புடன் அவரை வரவேற்பது எனக்குப் பெருமை.

எங்கள் முதல் சந்திப்பிலிருந்தே, இருநாட்டு உறவுகளில் புதிய உற்சாகம், பரஸ்பர நம்பிக்கை மற்றும் நேர்மறை ஆற்றல் ஏற்பட்டுள்ளது. ஒத்துழைப்பு காரணமாக அனைத்து துறைகளிலும் அதிகரித்து வரும் முன்னேற்றத்துக்கான புகழை எனது நண்பர் பிரதமர் கார்னி அவர்களுக்கு அளிக்கிறேன்.

இந்தியாவும் கனடாவும் ஜனநாயக மதிப்புகளில் உறுதியான நம்பிக்கை கொண்டவை. மனிதகுல நலன் எங்கள் பொதுவான நோக்கம். இதுவே எங்களை ஒவ்வொரு துறையிலும் முன்னேற ஊக்குவிக்கிறது.

இன்று, இந்த நோக்கத்தை அடுத்த கட்டத்துக்கு கொண்டு செல்வது குறித்து விவாதித்தோம். 2030க்குள் இருநாட்டு வர்த்தகத்தை 50 பில்லியன் அமெரிக்க டாலராக உயர்த்துவது எங்கள் இலக்கு. பொருளாதார ஒத்துழைப்பின் முழு திறனையும் வெளிக்கொணர வேண்டும் என்பதே எங்கள் முன்னுரிமை. இதற்காக விரைவில் Comprehensive Economic Partnership Agreementஐ இறுதி செய்ய முடிவு செய்துள்ளோம். இது முதலீடு மற்றும் வேலைவாய்ப்புகளை அதிகரிக்கும்'' என தெரிவித்தார்.



## ஆத்தூரில் த.வெ.க மற்றும் அதிமுகவினர் கொத்து கொத்தாய் திமுகவில் அமைச்சர் முன்னிலையில் ஐக்கியம்

சின்னாளபட்டி, மார்ச்.02

திராவிட மாடல் ஆட்சியின் நலத்திட்டங்களால் ஈர்க்கப்பட்டு, திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் தொகுதியில் மாற்றுக்கட்சியினர் பெருமளவில் திமுகவில் இணைந்து வருகின்றனர். திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக அயலக அணி தலைவர் சுரக்காய்பட்டி பிரபு தலைமையில், சுரக்காய்பட்டி மற்றும் ஜெ.ஊத்துப்பட்டியைச் சேர்ந்த தமிழக வெற்றி கழகம் (TVK) மற்றும் அதிமுக இளைஞர் அணியினர் 30க்கும் மேற்பட்டோர் திமுக மாநில துணைப் பொதுச்செயலாளரும், அமைச்சருமான ஐ.பெரியசாமி முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர்.

அதேபோல், ரெட்டியார்சத்திரம் வடக்கு ஒன்றியம் முருநெல்லிக்கோட்டை ஊராட்சி முன்னாள் அதிமுக தலைவர் இராமர், அமைச்சருக்குச் சால்வை அணிவித்துத் தன்னை திமுகவில் இணைத்துக் கொண்டார். இணைந்தவர்களை வரவேற்றுப் பேசிய அமைச்சர் ஐ.பெரியசாமி, "முதல்வர் மு.க.ஸ்டாலின் மற்றும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் சிறப்பான செயல்பாடுகளே இளைஞர்கள் திமுகவை நோக்கி வரக் காரணம். ஆத்தூர் தொகுதியில் தகுதியுள்ள இளைஞர்களுக்குத் தொடர்ந்து அரசு வேலைவாய்ப்புகள் பெற்றுத் தரப்படும்; கழகத்தில் இணைந்தவர்களின் வாழ்வாதாரம் காக்கப்படும்,'' என உறுதி அளித்தார்.

நிகழ்ச்சியில் மாவட்ட அவைத்தலைவர் வழக்கறிஞர் காமாட்சி, மாவட்ட துணைச் செயலாளர் நாகராஜன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் தண்டபாணி, ஆத்தூர் நடராஜன், ஒன்றிய செயலாளர்கள் வேடசந்தூர் வீரா. சுலீமிநாதன், முருகேசன், இன்பராஜ், வடக்கு ஒன்றிய திமுக துணைச் செயலாளர் பொன்மணி, திண்டுக்கல் மாநகர பொருளாளர் மீடியா சரவணன், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் இல.கண்ணன், இலக்கிய அணி அமைப்பாளர் முருகானந்தம், பொதுக்குழு உறுப்பினர் அக்பர், மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர்கள் விவேகானந்தன், பஞ்சம்பட்டி மணி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் டி.பண்ணைப்பட்டி அருண்ஜெகநாதன், திண்டுக்கல் கிழக்கு பகுதி செயலாளர் இராஜேந்திரகுமார், முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர்கள் காளீஸ்வரி மலைச்சாமி, வண்ணம்பட்டி காணிக்கைசாமி, சுமதி கணேசன், மாநகர 8வது வார்டு செயலாளர் மார்க்கெட் சக்திவேல், அகரம் பேரூராட்சி மன்ற தலைவர் நந்தகோபால் (எ) மணி, திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர் நெல்லை சுபாஸ், ரெட்டியார்சத்திரம் ஒன்றிய திமுக முன்னாள்இளைஞரணி துணை அமைப்பாளர் பி.செந்தில், ஆத்தூர் தெற்கு ஒன்றிய விவசாய அணி அமைப்பாளர் வீரக்கல் மதன்குமார், சிறுபான்மையினர் அணியைச் சேர்ந்த முஜீப் மற்றும் இளைஞரணியினர் உட்பட திமுக நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.

கொத்து கொத்தாய், கூட்டம் கூட்டமாய் த.வெ.க, அதிமுக கட்சியைச் சேர்ந்த நிர்வாகிகள் தொண்டர்கள் அக்கட்சியை விட்டு திமுகவில் தொடர்ந்து இணைந்து வருவது த.வெ.க கட்சியினர் மத்தியில் கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

## அதிமுக ஆட்சி அமைய தென் மாவட்ட மக்கள் துணை நிற்பார்கள்: இபிஎஸ் நம்பிக்கை

மதுரை: மார்ச்.3-

தேசிய ஜனநாயகக் கூட்டணி அதிக தொகுதிகளில் வெற்றி பெற்று அதிமுக ஆட்சி அமைய தென் மாவட்ட மக்கள் துணை நிற்பார்கள் என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் பழனிசாமி தெரிவித்தார்.

மதுரையில் நேற்று நடைபெற்ற தேசிய ஜனநாயகக் கூட்டணி பொதுக்கூட்டத்தில் அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி பேசியதாவது: தமிழகத்தில் உள்ள மக்கள் விரோத ஆட்சியை அகற்றவே தேசிய ஜனநாயக கூட்டணி அமைக்கப்பட்டுள்ளது.

எங்கள் கூட்டணியில் மக்கள் செல்வாக்குப் பெற்ற கட்சிகள் இணைந்துள்ளன. எம்ஜிஆர், ஜெயலலிதாவுக்கு தென் மாவட்ட மக்கள் பக்கபலமாக இருந்தனர். எம்ஜிஆர் அதிமுகவை தொடங்கியபோது திண்டுக்கல் மக்கள வைத் தேர்தலில் வெற்றியைக் கொடுத்து தென் மாவட்ட மக்கள் ஆதரித்தனர்.



அதுபோல், வரும் சட்டப்பேரவைத் தேர்தலிலும் அதிக தொகுதிகளில் வெற்றிபெறச் செய்து அதிமுக ஆட்சி அமைவதற்கு தென் மாவட்ட மக்கள் துணை நிற்பார்கள்.

மத்திய அரசு நிதி வழங்கவில்லை என்று முதல்வர் ஸ்டாலின் அடிக்கடி அவதூறுகளைப் பரப்புகிறார். இன்று கூட தமிழகத்துக்கு ரூ.4,500 கோடி வளர்ச்சித் திட்டங்களை மோடி தொடங்கி வைத்துள்ளார்.

குடும்ப நலன் மட்டுமே திமுக கட்சியின் நிலைப்பாடாக உள்ளது. 2ஜி ஸ்பெக்ட்ரம் முறைகேட்டில் ரூ.1 லட்சத்து 76 ஆயிரம் கோடி ஊழல் செய்தனர்.

சர்க்காரிய கமிஷன் அறிக்கையில் திமுக விஞ்ஞான முறையில் ஊழல் செய்ததாக குறிப்பிட்டுள்ளனர். கடந்த 5 ஆண்டு கால ஊழல் நிறைந்த திமுக ஆட்சி அகற்றப்பட வேண்டும்.

தென் மாவட்டங்களுக்கு அதிமுக ஆட்சியில் பல்வேறு திட்டங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. 11 அரசு மருத்துவக் கல்லூரிகள் அதிமுக ஆட்சியில் கொண்டு வரப்பட்டன. திமுக ஆட்சியில் ஒரு மருத்துவக் கல்லூரியைக் கூட பெற முடியவில்லை.

அதிமுக ஆட்சியில் இருந்தபோதுதான் 'எய்ம்ஸ்' மருத்துவமனை திட்டம் மதுரைக்குக் கொண்டு வரப்பட்டது. தற்போது இந்த மருத்துவமனை கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

அந்த மருத்துவமனையை வரவிடாமல் திமுக தடுக்க பார்த்தது. மதுரை விமான நிலைய விரிவாக்கத்துக்கு அதிமுக ஆட்சியில் 'அண்டர் பாஸ்' முறையில் முயற்சிகளைச் செய்தோம். தற்போது இந்த திட்டத்தையும் திமுக அரசு முடக்கி வைத்துள்ளது.

## "உதயநிதியை முதல்வராக்க திமுக இந்தத் தேர்தலை சந்திக்கிறது" : நயினார் நாகேந்திரன்

சென்னை: மார்ச்.3-

"என்டிஏவில் தொகுதிப் பங்கீடு பேச்சுவார்த்தை இன்னும் தொடங்கவில்லை. தேர்தல் தேதி அறிவித்த பிறகே தொகுதிப் பங்கீடு பேச்சுவார்த்தை தொடங்கும். உதயநிதியை முதல்வராக்க திமுக இந்தத் தேர்தலை சந்திக்கிறது'' என பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் இன்று செய்தியாளர்களிடம் கூறும்போது, "கூட்டணி பேச்சுவார்த்தை முன்பே முடிந்துவிட்டது. தற்போது இரு கட்சி தலைவர்கள் மட்டும் சந்தித்துள்ளனர். இபிஎஸ்ஸின் டெல்லி பயணம் குறித்து அமித் ஷாவுக்கும், அண்ணன் இபிஎஸ்ஸுக்கும் மட்டுமே தெரியும். என்டிஏவில் தொகுதிப் பங்கீடு பேச்சுவார்த்தை இன்னும் தொடங்கவில்லை. தேர்தல் தேதி அறிவித்த பிறகே தொகுதிப் பங்கீடு பேச்சுவார்த்தை தொடங்கும்.

அனைத்து வகையிலும் தமிழகம் இன்று தாழ்ந்து போயுள்ளது. கையில் புத்தகத்தை பிடிக்க வேண்டிய மாணவர்கள் அனைவரும் கஞ்சாவை வைத்துள்ளனர். பெண்கள் சுதந்திரமாக நடமாட முடியவில்லை. 50% பெண்களுக்கு பாதுகாப்பில்லாத மாநிலமாக தமிழகம் உள்ளது என தேசிய மகளிர் ஆணையம் தெரிவித்துள்ளது. இந்தியாவிலேயே தமிழகத்தில் தான் தற்கொலைகளின் எண்ணிக்கை அதிகம்.

துணை முதல்வர் உதயநிதியை முதல்வராக்க வேண்டுமென அவர்கள் இந்தத் தேர்தலை சந்திக்க இருக்கிறார்கள். அதிகார பலம், பண பலம் என அனைத்தையும் குவித்து எல்லா இடங்களிலும் வைத்திருக்கிறார்கள். அதைவிட மக்கள் பலம்தான் பெரியது என இந்த தேர்தல் நிருபிக்கும்'' என்று அவர் தெரிவித்துள்ளார்.

## மோடி முன்வைத்த ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு ஸ்டாலின் பதிலளிக்க வேண்டும்: தமிழக பாஜக

சென்னை: மார்ச்.3-

தமிழக மக்களின் வரிப்பணம், திமுக ஆட்சியில் எந்தெந்த துறையில் எவ்வளவு கொள்ளையடிக்கப்பட்டது என்பது குறித்து, விவரமாக வெளிப்படையாக பிரதமர் மோடி குற்றம் சாட்டினார். பிரதமரின் ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு முதல்வர் ஸ்டாலின் பதிலளிக்க வேண்டும் என தமிழக பாஜக விமர்சித்துள்ளது.




இது குறித்து தமிழக பாஜக வெளியிட்டுள்ள அறிக்கையில், "மதுரையில் 2026, நேற்று மார்ச் 1 அன்று நடைபெற்ற தேசிய ஜனநாயகக் கூட்டணி (NDA) தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில், திமுக அரசு மீது பிரதமர் மோடி முன்வைத்த ஊழல் மற்றும் நிர்வாகச் சீர்கேடு குறித்த குற்றச்சாட்டுகளுக்கு முதல்வர் ஸ்டாலின் பதிலளிக்க வேண்டும்.

புதுக்கோட்டையில் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா திமுக அரசு 20 சதவீதம் ஊழல் செய்யும் அரசு என்று குற்றம் சாட்டினார். பல்வேறு அமைச்சர்களின் ஊழல் குற்றச்சாட்டுகளை பட்டியலிட்டார். ஆனால் முதல்வர் ஸ்டாலின் கண் பொத்தி, வாய் மூடி, காது கேளாதவர் போல், குற்றச்சாட்டுகளுக்கு தொடர்ந்து பதில் சொல்லாமல் மவுனியாக நாடகமாடுவது ஏன்?

நேற்று மதுரையில் நடந்த தேசிய ஜனநாயக கூட்டணி பொதுக்கூட்டத்தில் பிரதமர் மோடி, திமுக ஆட்சியில் பல்வேறு துறைகளில் ஊழல் மலிந்துள்ளதாகக் கூறி மணல் கொள்ளை ஊழல்: ரூ.4,700 கோடி, டாஸ்மாக் மதுபானம் முறைகேடு: ரூ.40,000 கோடி, அரசுப் பணி நியமன ஊழல்: ரூ.900 கோடி, அரசு ஒப்பந்த ஊழல்: ரூ.1,000 கோடி, பணிஇடமாற்ற ஊழல், ரூ.365 கோடி, என ஏறத்தாழ 48 ஆயிரம் கோடி ரூபாய் ஊழல் குறித்து பேசி, தமிழக மக்களின் வரிப்பணம், திமுக ஆட்சியில் எந்தெந்த துறையில் எவ்வளவு கொள்ளையடிக்கப்பட்டது என்பதை, விவரமாக வெளிப்படையாக குற்றம் சாட்டினார்.

வழக்கமாக அமைச்சர்கள் மக்கள் நலத்திட்டங்களைச் செயல்படுத்துவதில் தான் போட்டியிடுவார்கள், ஆனால் திமுக அமைச்சர்கள் யார் அதிக ஊழல் செய்வது என்பதில் ஒருவருக்கொருவர் போட்டியிடுகிறார்கள் என்று பிரதமர் மோடி மிகுந்த வருத்தத்துடன் தன்னுடைய வேதனையை தெரிவித்தார்.

நல்லாட்சி நாயகன் போல கூட்டங்களில் பேசும் முதல்வர் ஸ்டாலின் மற்றும் நடிகர் விஜய்யை மிஞ்சி வீராப்பு வசனங்கள் பேசும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் இருவரும் தமிழக மக்கள் மன்றத்தின் முன் உடனடியாக பதில் சொல்ல வேண்டும்.

பிரதமரின் ஆவாஸ் யோஜனா (PMAY) வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் சுமார் 3 லட்சம் வீடுகள் கட்டப்படுவதை திமுக அரசு தடுத்து நிறுத்தியது ஏன்? உயர் நீதிமன்றம் ஊழல் அமைச்சர்கள் மீது வழக்குப் பதிவு செய்ய வேண்டும் என்று அறிவுறுத்தியும் முதல்வர் ஸ்டாலின் அமைச்சர்களை பாதுகாக்கும் மாயம் என்ன? மர்மம் என்ன? ஊழல் பங்கின் லாபம் என்ன என்பதையும் உடனடியாக விளக்க வேண்டும்'' என்று வினவப்பட்டுள்ளது.

# தமிழ்நாடு மருத்துவத்துறை அமைச்சுப்பணி அலுவலர் சங்கத்தின் புதிய மாநில நிர்வாகிகள் பதவியேற்பு விழா



சென்னை மார்ச். 3-

தமிழ்நாடு அரசின் அங்கீகாரம் பெற்ற முதன்மை சங்கமான தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் பிரதான இணைப்புச் சங்கமான, தமிழ்நாடு மருத்துவத்துறை அமைச்சுப்பணி அலுவலர் சங்கத்தின் புதிய மாநில நிர்வாகிகள் பதவியேற்பு விழா, சென்னை எழும்பூர் ஹோட்டல் கிங்ஸ் தாமரை ஹாலில் மாநிலத் தேர்தல் அலுவலர் கே. சூரியநாராயணன் முன்னிலையில், ரவிக்குமார் மாநிலத் தலைவராக முறைப்படி பதவிப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார். மாநிலப் பொதுச் செயலாளர் எஸ். முத்து ரமேஷ் நிகழ்வினை முன்னின்று நடத்தினார்.

*முக்கிய நிர்வாகிகள் பங்கேற்பு:*

புதிதாகப் பொறுப்பேற்ற மாநில நிர்வாகிகள், மாநிலப் பொருளாளர் பார்த்தசாரதி, மாநில தலைமை நிலைச் செயலாளர் கண்ணன், மாநில அமைப்புச் செயலாளர் ஜி.பாலமுருகன், துணைப் பொதுச் செயலாளர் சேகர், துணைச் செயலாளர் மதுரை அ. இளங்கோ, இணைச் செயலாளர்கள் ஹரிகிருஷ்ணன், கோதண்டராமன், மாவட்டத் தலைவர்கள் பி. கார்த்திகேயன் (சென்னை கிளை1), ஜெ. ராஜன் (சென்னை கிளை2).

*சிறப்புரை மற்றும் வாழ்த்துரை:*

மாநிலத் தலைவர் வெ. மகேந்திரகுமார் விழாவில் பங்கேற்று எழுச்சிமிகு பேருரை ஆற்றினார். மேலும், சிறப்பு அழைப்பாளராக ஓய்வுபெற்ற மருத்துவக் கல்வி இயக்குநர் டாக்டர் எட்வின் ஜோ கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார். முன்னாள் மாநிலத் தலைவர்கள் என். தண்டபாணி, தேசிங்குராஜன் மற்றும் முன்னாள் மாநிலத் துணைத் தலைவர்கள் சந்திரசேகர், குமார் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

*வாழ்த்து தெரிவித்த சங்கங்கள்:*

அரசு அலுவலர் ஒன்றியத்தின் மாநிலப் பொருளாளர் திலகர், துணைத் தலைவர்கள் பாலசுப்பிரமணியன், ராஜா, மகளிரணிச் செயலாளர் கவிதா மற்றும் பல்வேறு மாவட்டத் தலைவர்கள் கலந்துகொண்டனர். மேலும், செவிலியர் சங்க மாநிலத் தலைவர் தங்கத்துரை, முனைவர் வெங்கடாசலம், அனைத்து ஊழியர் சுகாதாரச் சங்க மாநிலத் தலைவர் லோகு, தலைமை நிலையச் செயலாளர் டி. குணசேகரன் உள்ளிட்டோர் வாழ்த்து தெரிவித்தனர்.

*நிறைவு மற்றும் நன்றியுரை:*

விழாவின் நிறைவில் மாநில மகளிரணிப் பொருளாளர் பார்த்தசாரதி உரையாற்ற, சென்னை மாவட்டச் செயலாளர் அன்னராஜ் நன்றியுரை வழங்கினார். தமிழ்நாடு முழுவதும் இருந்து வந்திருந்த நூற்றுக்கணக்கான நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்களின் பங்கேற்புடன் விழா மிகச் சிறப்பாக நிறைவுற்றது.

# பாஜக அதிமுக மதுரை பொதுக் கூட்டத்தின் பொய்யுரைகளை மக்கள் ஏற்க மாட்டார்கள்: மு.வீரபாண்டியன்



சென்னை, மார்ச்.3-

மதுரை தேர்தல் பரப்புரை கூட்டம் பொய்யும், புனைச்சுருட்டும் நிறைந்த வெற்று முழக்கங்களாக அமைந்தது என இந்திய கம்யூனிஸ்ட் மாநிலச் செயலாளர் மு.வீரபாண்டியன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "மதுரையில் நடைபெற்ற தேர்தல் பரப்புரை பொதுக் கூட்டத்தில் பிரதமர் மோடியும், தேசிய ஜனநாயக கூட்டணிக் கட்சித் தலைவர்களும் உரையாற்றினர். அவ்வுரைகள் முரண்பாடுகளும், குழப்பங்களும் வாய்ச்சவடால்களும் நிரம்பி வழிந்தவையாக இருந்தன.

அதிமுக பாஜக கூட்டணி என எடப்பாடி கே. பழனிசாமியும், அவரது கட்சியினரும் பேசி வருகின்றனர். எடப்பாடி கே.பழனி\சாமி அவ்வாறே அக்கூட்டத்தில் பேசியதோடு, அதிமுக ஆட்சி அமைக்கும் என்றார். அதற்கு மாறாக, பிரதமர் மோடி அவர்களோ, தமிழ்நாட்டில் தேசிய ஜனநாயகக் கூட்டணி வெற்றி பெறும். அடுத்து, தேசிய ஜனநாயக கூட்டணியின் அரசு அமையும் எனப் பேசினார்.

இவை, கூட்டணியின் பெயர் குறித்தும், யார் ஆட்சி அமைப்பார்கள் என்பது குறித்தும் அக்கட்சிகளிடையே உள்ள முரண்பாட்டை வெளிப்படுத்துகிறது. இந்த முரண்பாடு குறித்தும், தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு அமையும் என பிரதமர் மோடி பேசியது குறித்தும், அதிமுகவினர் வாய் மூடி மவுனிகளாக உள்ளனர்.

கடந்த 2014 ஆம் ஆண்டில் இருந்து, 2025 ஆம் ஆண்டு வரை தமிழ்நாட்டில் ஏற்பட்ட புயல், வெள்ளம் உள்ளிட்ட இயற்கை பேரிடர்களுக்கான, நிவாரண நிதியாக ரூ.24 ஆயிரத்து 679 கோடி வழங்க வேண்டும் என்று தமிழ்நாடு அரசால் கேட்கப்பட்டது. ஆனால், கேட்கப்பட்ட நிதியில் வெறும் 17 விழுக்காடு நிதியை மட்டுமே ஒன்றிய மோடி அரசு வழங்கியது. தமிழ்நாட்டை வஞ்சித்தது. தமிழ்நாட்டுக்கு வழங்கிய பேரிடர் நிதியை விட 100 விழுக்காடு கூடுதல் நிதியை பாஜக ஆட்சி நடைபெறும் மகராஷ்டிரா, உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம் போன்ற மாநிலங்களுக்கு ஒன்றிய அரசு வழங்கியது. மோடி அரசின் இத்த பாரபட்சப் போக்கையும் வன்மத்தையும் தமிழ்நாட்டு மக்கள் மறந்து விடவில்லை.

அதேபோல் மதுரை, கோவை மெட்ரோ ரயில் திட்டங்களுக்கு அனுமதி மறுத்து விட்டு, வளர்ச்சிக்கு உதவுவதாக பிரதமர் மோடி வாய்ச்சவாடல் அடிக்கிறார். அதை மக்கள் ஏற்க மாட்டார்கள்.

தமிழ்நாடு நீண்டகாலமாக பின்பற்றி வரும் இரு மொழிக் கொள்கைக்கு எதிரான ஒன்றிய அரசின் தேசியக் கல்விக் கொள்கை 2020 ஐயும், இந்தி படிப்பதை கட்டாயமாக்கும் பிஎம் ஸ்ரீ கல்வி திட்டத்தையும் ஏற்கும்படி நிர்பந்தித்து, தமிழ்நாட்டுக்கு வழங்க வேண்டிய கல்வி நிதி ரூ.2401 கோடியை கொடுக்க மறுத்து வரும் ஒன்றிய அரசின் அடாவடித்தன அரசியலுக்கு, தமிழ்நாடு சரியான பாடம் புகட்டும்.

நமது நாடாளுமன்ற ஜனநாயக முறையில், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில ஆட்சிக்கு எதிராக, ஆளுநர் வழியாக, போட்டி அரசாங்கம் நடத்தும் அதிகார அத்துமீறல்களும், அட்டூழியங்களும் ஜனநாயக உணர்வு கொண்டோர் உள்ளங்களில் ஆழமான காயங்களை ஏற்படுத்தியுள்ளது.

மாநில அரசுக்கு எதிராக செயல்படும் மோடி, மண்ணுரிமை போராட்டம் நடத்திய கட்டபொம்மன், அழகுமுத்துக்கோன், பூலித்தேவன் பெயர்களை குறிப்பிட்டு, புகழுரையாற்றுவது பச்சை பாசங்குத்தனமாகும். தமிழ்நாட்டு மக்களை ஏமாற்றும் வேலையாகும்.

தமிழ்நாட்டின் மதநல்லிணக்கத்தை சீர்குலைக்கும் நோக்கத்துடன் திருப்பரங்குன்றத்தின் தீபம் ஏற்றும் வழக்கத்தை மாற்ற நடக்கும் முயற்சிகளையும், அதற்கு தமிழர்கள் வணங்கும் கடவுளான முருகனை பயன்படுத்துவதும் அப்பட்டமான வகுப்புவாதப் பரப்புரையாகும்.

நாட்டின் பிரதமர் பொறுப்பில் இருந்து கொண்டு, பேசும் பொறுப்பற்ற பேச்சாகும். மொத்தத்தில் மதுரை தேர்தல் பரப்புரை கூட்டம் பொய்யும், புனைச்சுருட்டும் நிறைந்த வெற்று முழக்கங்களாக அமைந்தது" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# மெட்ரோ நகரங்களை இணைக்க 5, 6வது ரயில் பாதைகள் அமைக்க முடிவு



புதுடெல்லி, மார்ச்.3-

அதிக போக்குவரத்து உள்ள சென்னை, டெல்லி போன்ற மெட்ரோ நகரங்களை இணைக்க 5, 6வது ரயில் பாதைகளை அமைக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

டெல்லி, ஹவுரா, மும்பை, சென்னை ஆகிய 4 முக்கிய பெருநகரங்களை இணைக்கும் அதிக போக்குவரத்து கொண்ட ரயில் பாதைகளில் (எச்டிஎன்) 5, 6வது ரயில் பாதைகளை அமைக்கும் திட்டம் தொடர்பான ஆலோசனையை ரயில்வே அமைச்சகம் அண்மையில் தொடங்கியுள்ளது. இவ்வாறு 5, 6வது ரயில் பாதைகள் அமைப்பதன் மூலம் இந்த பாதைகளில் அதிக பயணிகள், சரக்கு ரயில்களை இயக்க முடியும்.

இந்த 4 நகரங்களை இணைக்கும் அதிக போக்குவரத்து கொண்ட ரயில்வே தடங்கள் (எச்டிஎன்) 11,051 கிலோ மீட்டர் தூரத்துக்கு உள்ளது. இதுதான் ரயில்வேயின் முதுகெலும்பாக உள்ளது. ஒட்டுமொத்த ரயில்வே நெட்வொர்க்கில் 16 சதவீத பங்கை இந்த 4 நகரங்களை இணைக்கும் ரயில் பாதைகள் வழங்குகின்றன. இந்தப் பாதைகள் மூலம் 41 சதவீத ரயில் போக்குவரத்து நடைபெறுகிறது.

டெல்லி ஹவுரா (1,422 கிலோ மீட்டர்), ஹவுரா மும்பை (2,039 கிலோ மீட்டர்), டெல்லி மும்பை (1,321 கிலோ மீட்டர்), டெல்லி குவாஹாட்டி (1,875 கிலோ மீட்டர்), டெல்லி சென்னை (2,041 கிலோ மீட்டர்), ஹவுரா சென்னை (1,117 கிலோ மீட்டர்), மும்பை சென்னை (1,238 கிலோ மீட்டர்) ஆகிய 7 பாதைகள் அதிக ரயில் போக்கு வரத்துப் பாதைகளாக கண்டறியப்பட்டுள்ளன.

இந்த தடங்களில் தான் தற்போது, 5, 6வது ரயில் பாதைகளை அமைக்க மத்திய ரயில்வே அமைச்சகம் முடிவு செய்துள்ளது. இது தொடர்பாக ரயில்வே மண்டல மூத்த அதிகாரிகளை ரயில்வே வாரிய அதிகாரிகள் அழைத்து ஆலோசனை நடத்தி உள்ளனர்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் இரட்டை ரயில் பாதைகள், மல்ட்டி டிராக்கிங், 5, 6வது ரயில் பாதைகள் அமைத்தல் போன்றவை குறித்து விவாதிக்கப்பட்டுள்ளன. மேலும் ரயில்வே மண்டலங்கள் சார்பாக திட்ட அறிக்கையையும் தயாரித்துத் தருமாறு ரயில்வே வாரியம் கேட்டுக்கொண்டுள்ளது.

# "நியாயமான தீர்ப்புகளை வழங்கினால் மட்டுமே நீதிமன்றங்கள் மீது நம்பிக்கை கூடும்" உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சூர்ய காந்த்



திருப்பதி, மார்ச்.3-

உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சூர்ய காந்த் நேற்று முன்தினம் இரவு திருமலைக்கு வந்தார். அவரை திருமலை திருப்பதி தேவஸ்தான அறங்காவலர் குழு தலைவர் பிஆர் நாயுடு, நிர்வாக அதிகாரி எம். ரவிச்சந்திரா உட்பட பல உயர் அதிகாரிகள் வரவேற்றனர்.

பின்னர், இரவு திருமலையில் தங்கிய தலைமை நீதிபதி சூர்ய காந்த், நேற்று காலை தனது குடும்பத்தாருடன் ஏழுமலையானை தரிசனம் செய்தார். தரிசனம் செய்த பின்னர், ரங்க நாயக மண்டபத்தில் தலைமை நீதிபதிக்கு சேஷ வஸ்திரம் அணிவித்து, வேத பண்டிதர்களால் ஆசி வழங்கப்பட்டது. அதன் பின்னர், தலைமை நீதிபதிக்கு தீர்த்த பிரசாதங்கள் வழங்கி கவுரவிக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், அறங்காவலர் பிஆர் நாயுடு, நிர்வாக அதிகாரி எம். ரவிச்சந்திரா, கூடுதல் நிர்வாக அதிகாரி வெங்கைய்ய சவுத்ரி மற்றும் உயர் நீதிமன்ற மற்றும் மாவட்ட நீதிபதிகள் பங்கேற்றனர். இதைத் தொடர்ந்து, திருப்பதியில் தாமினேடு பகுதியில் புதிதாகக் கட்டப்பட உள்ள 16 கட்டிடங்கள் கொண்ட திருப்பதி மாவட்ட புதிய மாவட்ட நீதிமன்றத்துக்கு உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சூர்ய காந்த் அடிக்கல் நாட்டினார்.

பின்னர் தலைமை நீதிபதி பேசும்போது, "நீதிமன்றங்களில் இரு தரப்பு வாதங்களும் சரியான முறைப்படி இருத்தல் அவசியம். அப்படி இருந்தால் தான் நீதிபதியும் சரியான தீர்ப்பை வழங்க முடியும். அப்படி நியாமான தீர்ப்புகள் வழங்கப்படும் பட்சத்தில் தான் மக்களுக்கு சட்டம், நீதிமன்றங்கள், நீதிபதிகள் மீது நம்பிக்கை ஏற்படும்" என்றார்.

இந்நிகழ்ச்சியில் ஆந்திர மாநில உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி தீரஜ் சிங் தாக்குர் உட்பட பல்வேறு மாவட்ட நீதிபதிகள், வழக்கறிஞர்கள் பங்கேற்றனர்.



# கச்சா எண்ணெய் ஏற்றி வந்த கப்பல் மீது ஈரான் தாக்குதல்: 15 இந்தியர்கள் உட்பட 20 பேர் மீட்பு

புதுடெல்லி, மார்ச்.3-

அமெரிக்கா, இஸ்ரேல் ஆகிய நாடுகள் நடத்திய தாக்குதலுக்கு பழிவாங்கும் விதமாக, குவைத், ஐக்கிய அரபு அமீரகம், ஓமன், கத்தார் ஆகிய நாடுகளில் உள்ள அமெரிக்கத் தளங்களை ஈரான் தாக்கியது. இந்நிலையில் தற்போது இராக்கிலும் ஈரான் தாக்குதலைத் தொடங்கியுள்ளது.

இந்நிலையில் ஓமன் அருகே கடலில் கச்சா எண்ணெய் ஏற்றி வந்த சரக்குக் கப்பல் மீது திடீரென ஈரான் விமானப் படை நேற்று தாக்குதல் நடத்தியது. இந்தக் கப்பல் ஹோர்முஸ் நீரிணை பகுதியில் நேற்று வந்து கொண்டிருந்த போது இந்தத் தாக்குதல் நடந்துள்ளது. இதில் கப்பல் தீப்பற்றி எரிந்தது. இதையடுத்து இந்தக் கப்பலில் இருந்த 15 இந்தியர்கள் உட்பட 20 பேர் மீட்கப்பட்டனர். தாக்குதலில் 4 ஊழியர்கள் காயமடைந்தனர்.

அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளதாக ஓமன் கடல்சார் பாதுகாப்பு மையம் தெரிவித்துள்ளது. கப்பலில் இருந்த 20 ஊழியர்களில் 5 பேர் ஈரான் நாட்டவர் ஆவர். மேலும் ஏவுகணை தாக்குதல் மூலம் ஓமனின் துக்கும் துறைமுகமும் தாக்கப்பட்டதாக ஓமன் அதிகாரிகள் தெரிவித்தனர். கப்பல் ஊழியர்கள் 20 பேரும் தற்போது பாதுகாப்பான இடத்துக்குக் கொண்டு செல்லப்பட்டதாக அந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

# காமேனி மரணத்துக்கு பதிலடி: அமெரிக்க போர்க்கப்பல் மீது ஈரான் தாக்குதல்



டெஹ்ரான், மார்ச்.3-

ஈரானின் உச்ச தலைவர் அயதுல்லா அலி காமேனி கொல்லப்பட்டதைத் தொடர்ந்து, அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் மீதான தனது தாக்குதலை ஈரான் தீவிரப்படுத்தியுள்ளது.

(ஞாயிற்றுக்கிழமை) ஈரானின் புரட்சிகர பாதுகாப்புப் படை, பாரசீக வளைகுடாவில் நிலைகொண்டுள்ள அமெரிக்காவின் பிரம்மாண்டமான 'யுஎஸ்எஸ் லிங்கன்' போர்க்கப்பல் மீது நான்கு பாலிஸ்டிக் ஏவுகணைகளை வீசித் தாக்கியுள்ளதாக அறிவித்துள்ளது. இது மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சனிக்கிழமை டெஹ்ரானில் நடைபெற்ற உயர்மட்டக் கூட்டத்தின் போது, இஸ்ரேல் மற்றும் அமெரிக்கப் படைகள் சக்திவாய்ந்த குண்டுகளை வீசித் தாக்குதல் நடத்தின. இதில் 86 வயதான ஈரானின் உச்ச தலைவர் காமேனி, ஈரானின் பாதுகாப்பு அமைச்சர் அமீர் நாசர்சாதே மற்றும் ராணுவத் தளபதி முகமது பாக்பூர் ஆகியோர் கொல்லப்பட்டனர்.

இந்தத் தகவலை இன்று அதிகாலை ஈரான் உறுதிப்படுத்தியது. இதனைத் தொடர்ந்து, ஈரானின் இடைக்கால உச்ச தலைவராக மூத்த மதகுரு அயதுல்லா அலிரேசா அராபி நியமிக்கப்பட்டுள்ளார்.

காமேனியின் மறைவுக்கு பதிலடி தரும் வகையில், இஸ்ரேல் மீதும், அமெரிக்கப் படைகள் நிலைகொண்டுள்ள துபாய், அபுதாபி, தோஹா மற்றும் மனாமா ஆகிய நகரங்கள் மீதும் சரமாரியாக ஏவுகணைகளை ஈரான் வீசி வருகிறது. துபாயில் உள்ள சிஐஏ தலைமையகம் அமைந்துள்ள கட்டடம் ஒன்றில் பயங்கர தீ விபத்து ஏற்பட்ட வீடியோக்கள் இணையத்தில் வைரலாகி வருகின்றன.

இதற்கிடையில், ஈரானின் வான் பாதுகாப்பு அமைப்புகளைத் தாங்கள் முடக்கிவிட்டதாக இஸ்ரேல் ராணுவம் தெரிவித்துள்ளது.

மத்திய கிழக்கில் விமானப் போக்குவரத்து முற்றிலும் முடங்கியுள்ள நிலையில், உலக நாடுகள் இப்பகுதிகளில் உள்ள தங்களது குடிமக்களைப் பாதுகாப்பாக வெளியேற்ற முயற்சித்து வருகின்றன. இந்திய வெளியுறவுத் துறை நிலைமையை உன்னிப்பாகக் கவனித்து வருவதாகவும், இந்தியர்கள் தேவையற்ற பயணங்களைத் தவிர்க்குமாறும் கேட்டுக்கொண்டுள்ளது.

# வளைகுடா நாடுகளில் போர் பதற்றம்: தமிழர்களுக்காக அவசர உதவி எண்கள் அறிவிப்பு



சென்னை, மார்ச்.3-

வளைகுடா நாடுகளில் நிலவி வரும் போர் பதற்ற சூழலை கருத்தில்கொண்டு, அங்குள்ள தமிழர்களின் அவசர உதவிக்காக உதவி எண்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட சமூக வலைதள பதிவில் கூறியிருப்பதாவது: அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் ஈரான் நாடுகளுக்கு இடையே ஏற்பட்டுள்ள போர் காரணமாக, ஈரான் மற்றும் அதைச் சுற்றியுள்ள ஐக்கிய அரபு அமீரகம், குவைத், பஹ்ரைன், ஓமன், சவுதி அரேபியா, கத்தார் உள்ளிட்ட வளைகுடாநாடுகளில் பதற்றமான சூழ்நிலை நிலவுகிறது.

அங்குள்ள இந்தியர்களின் பாதுகாப்பு கருதி, தேவையற்ற பயணங்களைத் தவிர்க்கவும், இந்திய தூதரகம் வழங்கும் அறிவுறுத்தல்களை முறையாக பின்பற்றி வீடுகளிலேயே பாதுகாப்பாக இருக்குமாறும் இந்திய அரசு கேட்டு கொண்டுள்ளது.

தமிழக முதல்வர் என்ற முறையில், வளைகுடா நாடுகளில் வசித்து வரும் நம் தமிழர்களின் பாதுகாப்பு குறித்து மிகுந்த கவலை அடைந்துள்ளேன். அவர்களின் நிலைமையை உடனுக்குடன் கண்காணித்து, அவர்களுக்கு தேவையான உதவிகளை வழங்க அயலக தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறைக்கு உரிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. அங்குள்ள தமிழர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் வழங்க தமிழக அரசு தயார் நிலையில் உள்ளது.

இதற்காக டெல்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத்தில் பிரத்யேகக் கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டு, நிலைமை தீவிரமாக கண்காணிக்கப்பட்டு வருகிறது.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள தமிழர்கள் அல்லது தமிழகத்தில் உள்ள அவர்களது குடும்பத்தினர் ஏதேனும் அவசர உதவி தேவைப்பட்டால், தமிழக அரசின் 24 மணி நேர கட்டணமில்லா உதவி எண்களைத் தொடர்பு கொள்ளலாம்.

அதன்படி, இந்தியாவுக்குள் இருப்பவர்கள் 1800 309 3793 என்ற எண்ணையும், வெளிநாடுகளில் இருப்பவர்கள் +91 80 6900 9900 மற்றும் +91 80 6900 9901 ஆகிய எண்களையும் தொடர்பு கொள்ளலாம். மேலும், டெல்லி கட்டுப்பாட்டு அறையை 01124193300 மற்றும் 92895 16712 (வாட்ஸ்அப்) ஆகிய எண்கள் மூலம் தொடர்பு கொள்ள வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



# நாக்பூர் தொழிற்சாலை வெடிவிபத்தில் 17 பேர் உயிரிழப்பு; 18 பேர் காயம்

நாக்பூர், மார்ச்.3-

மகாராஷ்டிர மாநிலம், கட்டோல் பகுதி, ரவுல்கானில் சுரங்க, தொழில்துறை வெடிபொருள் உற்பத்தி செய்யும் எஸ்பிஎல் எனர்ஜி லிமிடெட் தொழிற்சாலை இயங்கி வருகிறது.

இந்த தொழிற்சாலையில் நேற்று காலை திடீரென வெடிவிபத்து ஏற்பட்டதாக போலீஸார் தெரிவித்தனர். இந்த சம்பவத்தில் 17 பேர் உயிரிழந்துள்ளனர்.

இது தொடர்பாக எஸ்பிஎல் தொழிற்சாலை அதிகாரி ஒருவர் கூறியதாவது: இன்று காலை தொழிற்சாலை வளாகத்தில் உள்ள டெட்டனேட்டர் பேக்கிங் யூனிட்டில் காலை 7 மணி முதல் காலை 7.15 வரை இந்த வெடிவிபத்து நடந்துள்ளது. வெடி விபத்தில் காயமடைந்த தொழிலாளர்கள் நாக்பூரில் உள்ள மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

விபத்தில் இதுவரை 17 பேர் உயிரிழந்துள்ளனர். இங்கு தொடர்ந்து மீட்பு நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன. சம்பவம் தொடர்பான முழுத் தகவல்கள் விரைவில் வெளியிடப்படும். காயமடைந்த 18 பேருக்கு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

வெடி விபத்து நடந்த இடத்தில் தேசிய பேரிடர் மீட்புப் படையினரும் (என்டிஆர்எஃப்), மாநில பேரிடர் மீட்புப் படையினரும் (எஸ்டிஆர்எஃப்) மீட்புப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். வெடிவிபத்து நடந்த தொழிற்சாலையை மாவட்ட ஆட்சியர் விபின் இடங்கர், போலீஸ் எஸ்.பி.ஹர்ஷ் போடர் ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.



■ ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், மகாராஷ்டிர மாநிலம் நாக்பூரில் மாற்றுத்திறனாளிகளுக்காக (செவித்திறன் குறைபாடுடையோர் பிரிவு) தேசிய அளவில் மூன்றாம் இடம் பிடித்து சதுரங்கப் போட்டியில் சாதனை படைத்த மாணவன் கவுசிக், மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி அவர்களிடம் வாழ்த்து பெற்றார். இந்நிகழ்வின் போது மாவட்ட வருவாய் அலுவலர் திரு. சு. சாந்தகுமார் மற்றும் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திரு. பூபதி ஆகியோர் உடனிருந்தனர்.



# முதல்வர் பிறந்தநாள் வாசுதேவநல்லூரில் ‘வேல் கேர்’ இலவச மருத்துவ முகாம்

தென்காசி, மார்ச்.3-

தென்காசி மாவட்டம் வாசுதேவநல்லூர் தொகுதியில், தமிழக முதல்வர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களின் 73வது பிறந்தநாளை முன்னிட்டு, தொகுதி மருத்துவ அணி அமைப்பாளரும், ஊராட்சி மன்றத் தலைவருமான டாக்டர் ஜோதி மணிகண்டன் தலைமையில் வேல் கேர் (Well Care) மருத்துவமனையில் முகாம் தொடங்கி வைக்கப்பட்டது.

முகாமில் கலந்து கொண்ட பொதுமக்களுக்கு டாக்டர் மணிகண்டன் மருத்துவ ஆலோசனைகள் வழங்கினார். மேலும், இலவசமாக ணிசிநி, எக்ஸ்ரே, இரத்தப் பரிசோதனை, சர்க்கரை, கொழுப்பு, இரத்த அணுக்கள் உள்ளிட்ட பல்வேறு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. தேவையான மருந்துகளும் பொதுமக்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டன. இந்த இலவச மருத்துவ முகாம் பொதுமக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது.

*முன்னிலை:* மாநில மருத்துவ அணி துணைச் செயலாளர் டாக்டர் செண்பகவிநாயகம், மாவட்டக் கழகத் துணைச் செயலாளர் மனோகரன், மாவட்ட மருத்துவ அணித் தலைவர் டாக்டர் சுமதி.

*பங்கேற்பாளர்கள்:* பேரூர் செயலாளர் சேதுசுப்பிரமணியன், மருத்துவ அணி துணை அமைப்பாளர்கள் முத்துக்குமார், குருராஜ், பேரூர் தேர்தல் பொறுப்பாளர் கந்தவேல், கிருஷ்ணலீலா, தங்கராஜ், முத்துலட்சுமி, மணிகண்டன், ராமச்சந்திரன், இருளப்பன், இராம்குமார் உள்ளிட்டோர் பங்கேற்று சிறப்பித்தனர்.



# மாஸ் காட்டிய தவெக “அரியணையில் தளபதி.. சோழவந்தானில் வெற்றி!” விஜய் அன்பன் கல்லானை அதிரடி முழக்கம்

அலங்காநல்லூர் மார்ச். 3-

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் கேட்டுகடை பகுதியில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில், தமிழக வெற்றிக் கழகம் மதுரை புறநகர் வடக்கு மாவட்டம் சோழவந்தான் சட்டமன்றத் தொகுதி செயல்வீரர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.*மாஸ் வரவேற்பு:*

கூட்டத்திற்கு வருகை தந்த கழகத் தலைமை நிர்வாகக் குழு உறுப்பினரும், மாநிலத் துணைச் செயலாளருமான விஜய் அன்பன் கல்லானை அவர்களுக்கு மேளதாளங்கள் முழங்க, பட்டாசுகள் வெடித்து நிர்வாகிகள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.*ஆட்சிக் கட்டிலில் தளபதி தீர்மான உரை:*

கூட்டத்தில் தலைமை தாங்கிப் பேசிய மாவட்டச் செயலாளர் விஜய் அன்பன் கல்லானை தெரிவித்ததாவது: "அலங்காநல்லூர் என்றாலே தனிச்சிறப்பு உண்டு. கடந்த 25 ஆண்டுகளாக இப்பகுதிக்கு வருகிறேன்; ரசிகர் மன்றக் காலத்தைப் போலவே தற்போதும் இளைஞர்கள் பெரும் உற்சாகம் அளிக்கின்றனர். தமிழக மக்களுக்காக உழைக்க வந்துள்ள தளபதி விஜய்க்கு நாம் நன்றிக்கடன் பட்டிருக்கிறோம். வரும் சட்டமன்றத் தேர்தலில் அவரை அரியணையில் அமர வைப்பதே நமது இலக்கு."

இதில் ஒன்றிய செயலாளர் விஜய்ஹரிஷ், நகர செயலாளர் தளபதி ரஞ்சித், மேற்கு ஒன்றிய செயலாளர் கிருஷ்ணமூர்த்தி, பாலமேடு நகரச் செயலாளர் புகழ், வாடிப்பட்டி வடக்கு ஒன்றிய செயலாளர் தாமு, பேரூர் பசுமணி, சோழவந்தான் நிர்வாகி பால, நகரம் சுரேஷ், பாண்டி, மேற்கு ஒன்றிய செயலாளர் சரவணன், அலங்கைவெங்கடேஷ், அய்யங்காளை, ராமநாதன், முத்து, வடக்கு ஒன்றிய நிர்வாகிகள் தனசேகரன், கார்த்திக் மற்றும் பலர் கலந்து கொண்டனர். மகளிரணி சுஜா நன்றி கூறினார்.

# ஈரான் உடனான போர் 4 வாரங்கள் நீடிக்கலாம்: ட்ரம்ப் அறிவிப்பு

வாஷிங்டன், மார்ச்.3-

ஈரான் அமெரிக்கா இடையே நிலவி வரும் போர்ச் சூழல் குறித்துப் பேசிய அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப், இந்த ராணுவ நடவடிக்கை இன்னும் நான்கு வாரங்களுக்கு நீடிக்கலாம் என்று அறிவித்துள்ளார்.



ஊடகங்களுக்கு பேட்டியளித்த அவர், ஈரானின் பரப்பளவு மற்றும் தற்போதைய ராணுவ நிலவரத்தைக் கணக்கில் கொண்டு இந்த காலக்கெடுவைத் திட்டமிட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தத் தாக்குதல்கள் தற்காலிகமானவை அல்ல என்றும், அமெரிக்காவின் அனைத்து இலக்குகளும் எட்டப்படும் வரை போரின் வேகம் குறையாது என்றும் அவர் உறுதிபடத் தெரிவித்துள்ளார். இதுவரை நடைபெற்ற தாக்குதல்களில் ஈரானின் உச்ச தலைவர் அயதுல்லா அலி காமேனி உட்பட 48 முக்கியத் தலைவர்கள் கொல்லப்பட்டுள்ளதாகத் தெரிவித்த ட்ரம்ப், இது தாங்கள் எதிர்பார்த்ததை விடப் மிகப்பெரிய வெற்றி என்று கூறியுள்ளார்.

அதே நேரத்தில், இந்தப் போரில் மூன்று அமெரிக்க வீரர்கள் உயிரிழந்துள்ளதை அவர் அதிகாரபூர்வமாக உறுதிப்படுத்தியுள்ளார். அவர்கள் மிகச்சிறந்த வீரர்கள் என்று புகழாரம் சூட்டிய ட்ரம்ப், போர்க்களத்தில் இத்தகைய உயிரிழப்புகள் துரதிர்ஷ்டவசமானவை எனினும் தவிர்க்க முடியாதவை என்று குறிப்பிட்டுள்ளார்.

பேச்சுவார்த்தைக்கான வாய்ப்புகள் குறித்துக் கேட்கப்பட்டபோது, “அவர்கள் இப்போது பேச விரும்புகிறார்கள், ஆனால் கடந்த வாரமே பேசியிருக்க வேண்டும்” என்று பதிலளித்த அவர், தற்போதைக்குத் தாக்குதல்கள் தொடரும் என்று உறுதிபட தெரிவித்தார்.அணு ஆயுதம் மற்றும் நீண்ட தூர ஏவுகணைகளைக் கொண்டுள்ள ஈரான், நாகரிக உலகிற்கே பெரும் அச்சுறுத்தல் என்பதால் இந்தத் தாக்குதல் அவசியமானது என்று அவர் தெரிவித்துள்ளார்.

சவுதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம், கத்தார் மற்றும் ஜோர்டான் போன்ற நாடுகளின் தலைவர்களுடன் தான் தொடர்ந்து பேசி வருவதாகவும், அமெரிக்கப் படைகளின் அடுத்தகட்ட நகர்வுகள் குறித்து விரைவில் நாட்டு மக்களிடம் உரையாற்ற உள்ளதாகவும் ட்ரம்ப் தெரிவித்துள்ளார். ஈரானின் ராணுவ மற்றும் பொருளாதார மையங்களைக் குறிவைத்துத் தொடர்ந்து துல்லியமான தாக்குதல்கள் நடத்தப்படும் என்பதால், வளைகுடா நாடுகளில் நிலவும் பதற்றம் இன்னும் சில வாரங்களுக்குத் தொடரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

முன்னதாக, தனது ட்ரூத் சோஷியல் பக்கத்தில் பதிவிட்டுள்ள அவர், “9 ஈரானிய கடற்படை கப்பல்களை நாங்கள் அழித்து மூழ்கடித்துவிட்டதாக எனக்குத் தகவல் கிடைத்தது, அவற்றில் சில ஒப்பீட்டளவில் பெரியவை மற்றும் முக்கியமானவை. மீதமுள்ளவற்றை நாங்கள் தேடி வருகிறோம்.

அவை விரைவில் கடலின் அடிப்பகுதியில் மிதக்கும். ஒரு வித்தியாசமான தாக்குதலில், அவர்களின் கடற்படை தலைமையகத்தை நாங்கள் பெருமளவில் அழித்து விட்டோம். அதைத் தவிர, அவர்களின் கடற்படை மிகச் சிறப்பாக செயல்படுகிறது” என்று தெரிவித்துள்ளார். முன்னதாக, அமெரிக்கா

இஸ்ரேல் படைகள் நடத்திய தாக்குதலில் ஈரான் உச்ச தலைவர் அயத்துல்லா அலி காமேனி கொல்லப்பட்ட பின்னர் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் சமூக வலைதளத்தில் வெளியிட்ட பதிவுகளில், “உலக வரலாற்றின் தீய மனிதர்களில் ஈரான் மதத் தலைவர் அயத்துல்லா அலி காமேனியும் ஒருவர். அவர் உயிரிழந்துவிட்டார். இதன்மூலம் ஈரான் மக்களுக்கு முழுமையான நீதி கிடைத்திருக்கிறது. காமேனியால் பாதிக்கப்பட்ட நாடுகள் மற்றும் அமெரிக்க மக்களுக்கும் நீதி கிடைத்திருக்கிறது.

இந்த நேரத்தில் ஈரானிய மக்கள் ஆட்சி நிர்வாகத்தை தங்கள் கையில் எடுத்துக் கொள்ள வேண்டுகிறேன். ஈரானின் ஐஆர்ஜிசி, ராணுவம், காவல் துறையை சேர்ந்த வீரர்கள் போரிட விரும்பவில்லை. அவர்கள் ஈரானின் தேசப் பற்றாளர்களுடன் இணைவார்கள் என உறுதியாக நம்புகிறேன். ஈரானின் தீய சக்திகள் மீது அமெரிக்காவின் துல்லிய தாக்குதல் தொடரும். இந்த தாக்குதல் ஒரு வாரம் வரை நீடிக்கலாம். ஒரு வாரத்தையும் தாண்டி செல்ல வாய்ப்பு இருக்கிறது.

எங்களது குறிக்கோள் நிறைவேறும்வரை தாக்குதல் தொடரும். இதன் மூலம் மத்திய கிழக்கு முழுவதும் அமைதி திரும்பும். மத்திய கிழக்கு மட்டுமன்றி உலகம் முழுவதுமே அமைதி திரும்பும். பதிலடி கொடுக்கப்படும் என்று ஈரானின் இப்போதைய ஆட்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். முந்தைய தாக்குதல் களைவிட அதிதீவிரமாக தாக்குதல் நடத்துவோம் என்கின்றனர்.

அவ்வாறு பதில் தாக்குதல் நடத்தாமல் இருப்பது ஈரான் ஆட்சியாளர்களுக்கு நல்லது. ஒரு வேளை அவர்கள் தாக்குதல் நடத்தினால் நாங்களும் தாக்குதல் நடத்துவோம். எங்களது தாக்குதல், உலகம் இதுவரை காணாத வகையில் அதிதீவிர தாக்குதலாக இருக்கும். இதை ஈரான் ஆட்சியாளர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்” என்று ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.

# விடுதிகளுக்கு நீர் சுத்திகரிப்பான்கள், மாற்றுத்திறனாளிகளுக்கு வீல் சேர்: குறைதீர் கூட்டத்தில் திருப்பூர் கலெக்டர் கருணைக்கரம்

திருப்பூர், மார்ச்.3-

திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர். மனிஷ் நாரணவரே இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாவட்ட ஆட்சியரக அலுவலக கூட்டரங்கில் வாராந்திர மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.



*கோரிக்கை மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை:*

ஒவ்வொரு வாரமும் திங்கள் கிழமைகளில் நடைபெறும் இக்கூட்டத்தில், பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள் தொடர்புடைய துறை அலுவலர்களுக்கு அனுப்பப்பட்டு உரிய தீர்வு காணப்பட்டு வருகிறது. அந்த வகையில் இன்றைய கூட்டத்தில்:

* பெறப்பட்ட மனுக்கள்:* வீட்டுமனை பட்டா, முதியோர் உதவித்தொகை, புதிய குடும்ப அட்டை, சாலை மற்றும் குடிநீர் வசதி போன்ற பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக மொத்தம் 598 மனுக்கள் பெறப்பட்டன.

* ஆட்சியரின் அறிவுறுத்தல்* : மனுதாரர்கள் முன்னிலையிலேயே விசாரணைகளை மேற்கொண்ட மாவட்ட ஆட்சித்தலைவர், அம்மனுக்கள் மீது உரிய நடவடிக்கையினை விரைந்து எடுக்குமாறு சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

ரூ.1.32 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கல்

இன்றைய கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பல்வேறு நலத்திட்ட உதவிகளையும் வழங்கினார்:

* மாணவர் விடுதிகளுக்கு நீர் சுத்திகரிப்பான்கள்* : திருப்பூர் மாவட்ட நலச்சங்கம் சார்பில், ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் இயங்கும் 6 சமூக நீதி மாணவ விடுதிகளுக்கு, தலா ரூ.17,000 மதிப்பீட்டில் மொத்தம் ரூ.1.02 இலட்சம் மதிப்பிலான நீர் சுத்திகரிப்பான் இயந்திரங்களை வழங்கினார்.

* மாற்றுத்திறனாளிகளுக்கு வீல் சேர்கள்* : மாற்றுத்திறனாளி நலத்துறையின் கீழ், காங்கேயம் சில்லரன் சேரிடபுள் அறக்கட்டளை சார்பில் 4 மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ.7,500 மதிப்பீட்டில் மொத்தம் ரூ.30,000 மதிப்பிலான வீல் சேர்களை (கீலீமீமீறீ நீலீணீவீக்ஷீ௳) ஆட்சியர் வழங்கினார்.

இந்நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் க.கார்த்திகேயன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் (பொது) மகாராஜ், (வேளாண்மை) ஷீலா பூசலெட்சுமி, திருப்பூர் வருவாய் கோட்டாட்சியர் சிவபிரகாஷ், தனிதுணை ஆட்சியர் (சமூகபாதுகாப்புத்திட்டம்) பத்மபிரியா, மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் சதீஸ், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் சந்திரமோகன் உள்ளிட்ட அனைத்து அரசுத்துறை அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

# “சுற்றுச்சூழல் மண்டலமாகும் குற்றாலம் சோப்பு, ஷாம்பு, பிளாஸ்டிக்கிற்கு தடை தென்காசி ஆட்சியரின் மாஸ் பிளான்”

தென்காசி.மார்ச்.-

தென்காசி மாவட்டத்தின் அடையாளமான குற்றாலத்தை நெகிழி (பிளாஸ்டிக்) கழிவுகளற்ற தூய்மையான சுற்றுலாத் தலமாக மாற்றும் நோக்கில், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இன்று (28.02.2026) முக்கிய ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.



* ஆட்சியர் தலைமையில் ஆலோசனை:*

மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஏ.கே. கமல்கிஷோர், இ.ஆ.ப., தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. ஜி.எஸ்.மாதவன், மற்றும் மாவட்ட வன அலுவலர் முனைவர் ரா.ராஜ்மோகன், இ.வ.ப., ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாண்பமை நீதிமன்றத்தின் உத்தரவின்படி, குற்றாலத்தை முழுமையான நெகிழி இல்லாப் பகுதியாக மாற்றுவது குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது.

*அதிரடி கட்டுப்பாடுகள் மற்றும் சோதனைச் சாவடிகள்:*

குற்றாலத்தின் இயற்கை எழிலை பாதுகாக்கப் பல்வேறு அதிரடி முடிவுகள் இக்கூட்டத்தில் எடுக்கப்பட்டன:

* நுழைவு வாயிலில் சோதனை:* குற்றாலத்திற்கு வரும் அனைத்து சுற்றுலாப் பயணிகளின் வாகனங்களும் நுழைவுப் பகுதிகளில் அமைக்கப்படும் சோதனைச் சாவடிகளில் தீவிரமாகச் சோதிக்கப்படும்.

* பிளாஸ்டிக் பறிமுதல்:* வெளியே இருந்து கொண்டு வரப்படும் பிளாஸ்டிக் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டு, அதற்கு மாற்றாகப் பயன்படுத்த வேண்டிய பொருட்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.

*சோப்பு, ஷாம்புவிற்கு தடை:* அருவி பகுதிகளில் நீர் நிலைகளைப் பாதுகாக்கும் பொருட்டு சோப்பு மற்றும் ஷாம்பு பயன்படுத்துவதைத் தவிர்க்கத் தீவிர கண்காணிப்பு மேற்கொள்ளப்படும்.

*அபராதம் மற்றும் விழிப்புணர்வு:*

விதிமுறைகளை மீறும் தனிநபர்கள், உணவகங்கள் மற்றும் வணிக நிறுவனங்களுக்கு அபராதம் விதிக்கப்படும். இந்த அபராதத் தொகை குற்றாலப் பகுதியின் வளர்ச்சித் திட்டப் பணிகளுக்கே பயன்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், ஆட்டோ ஓட்டுநர்கள், வணிகர்கள் மற்றும் பொதுமக்களிடையே சமூக வலைத்தளங்கள் மற்றும் போஸ்டர்கள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

* ஒருங்கிணைந்த செயல்பாடு:*

இந்து சமய அறநிலையத்துறையின் கீழ் உள்ள கோவில் பகுதிகளைத் தூய்மையாக வைத்திருப்பது குறித்தும், கடைகளில் அவ்வப்போது ஆய்வு நடத்துவது குறித்தும் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது. "குற்றாலத்தைப் பசுமையான சுற்றுச்சூழல் மண்டலமாக மாற்ற அனைத்துத் துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்" என மாவட்ட ஆட்சியர் அறிவுறுத்தினார்.

*பங்கேற்றோர்:*

இந்நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு. சீ.ஜெயச்சந்திரன், சார் ஆட்சியர் செல்வி வைஷ்ணவி பால், இ.ஆ.ப., குற்றாலம் பேரூராட்சி செயல் அலுவலர் திரு. குமார்பாண்டியன், மாவட்ட உணவு பாதுகாப்பு அலுவலர் மற்றும் பல்வேறு துறை சார்ந்த உயர் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.



■ திசையன்விளையிலிருந்து திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் மாசி திருவிழாவை முன்னிட்டு பாதயாத்திரையாக செல்லும் பக்தர்களுக்கு தமிழக வெற்றிக் கழகம் சார்பில் பழங்கள் குளிர்பானங்கள் மற்றும் தண்ணீர் வழங்கப்பட்டன. நெல்லை தெற்கு மாவட்டச் செயலாளர் ராஜகோபால் ஆலோசனையின் பேரில் திசையன்விளை நகரச் செயலாளர் கில்லி ராஜா அவர்கள் தலைமையில் இந்நிகழ்ச்சி நடைபெற்றது. விழாவில் ராம் சுபாஷ், லிவிங்ஸ்டன், சுதன், சுரேஷ், மகேஷ் பிரபு, ராஜா, முத்து ராஜா, பேச்சு முத்து, ராஜ்மோகன், செந்தில் குமார், குகன் மற்றும் ஜெயராமன் உட்பட பல நிர்வாகிகள் கலந்து கொண்டனர். இதற்கான ஏற்பாடுகளை திசையன்விளை நகர அனைத்து நிர்வாகிகளும் சேர்ந்து செய்திருந்தனர்.



# தேவர் படம் மீது பெட்ரோல் குண்டு வீச்சு: சமூக விரோதிகளைக் கைது செய்யக்கோரி திருப்பூரில் மனு

திருப்பூர்.மார்ச்.3-

பசும்பொன் முத்துராமலிங்க தேவர் மக்கள் பாதுகாப்பு இயக்கத்தினர், திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மனு ஒன்றை வழங்கினார்கள் அதில் கூறியிருப்பது என்னவென்றால், நெல்லை மாவட்டம் திம்மராஜபுரத்தில் தேசிய தலைவர் சுதந்திர போராட்ட தியாகி பசும்பொன் முத்துராமலிங்க தேவர் திருவுருவப்படத்தின் மீது பெட்ரோல் குண்டு வீசிய சமூக விரோதிகளை கைது செய்ய வலியுறுத்தியும், அதே இடத்தில் ஐயாவிற்கு வெண்கல முழு உருவ சிலை தமிழக அரசு அமைத்து தர வேண்டுமென கோரிக்கை மனு வழங்கினார்கள். இந்த பெட்ரோல் குண்டு வீச்சு சம்பவம் என்பது ஒட்டுமொத்த முக்குலத்தோர் சமூக மக்களின் மனதையும் பொது மக்களின் மனதையும் கடுமையாக புண்படுத்தி உள்ளதாகவும் தெரிவித்தனர் இயக்கத்தின் நிறுவன தலைவர் இசக்கி ராஜா தேவர் வழிகாட்டுதலின்படி நிர்வாகிகள் மாவட்ட தலைவர் பால்பாண்டி, தென் மண்டல இளைஞர் அணி தலைவர் மணிகண்டன், துணைத் தலைவர் காந்தி, மாவட்ட பொருளாளர் மாரி துரை, மாவட்ட துணை செயலாளர் ஹரி கிருஷ்ணன், வர்த்தக அணி செயலாளர் சுப்பிரமணியன் உள்ளிட்ட நிர்வாகிகள் கோரிக்கை மனுவினை வழங்கினார்கள்.




# புளியங்குடியில் தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் 73வது பிறந்தநாள் விழா

புளியங்குடி.மார்ச்.3-

தென்காசி மாவட்டம் புளியங்குடி நகர கழகம் சார்பில் தமிழக முதல்வர் ஸ்டாலினின் 73 வது பிறந்த நாளை முன்னிட்டு நகர செயலாளர் அந்தோணிச்சாமி தலைமையில் நகர கழக அலுவலகத்தில் வைத்து கேக் வெட்டி கொண்டாடினர். இதனை தொடர்ந்து புளியங்குடி பேருந்து நிலையத்தில் பொதுமக்கள் பயணிகளுக்கு இனிப்புகள் வழங்கி கொண்டாடினர்.

இதில் நகர அவைத் தலைவர் வேலுச்சாமிபாண்டியன்,பொதுக்குழு உறுப்பினர் பத்திரம் சாகுல்ஹமீது,முன்னாள் நகர் மன்ற தலைவர் வெங்கட்ராமன், ஏ ஆர் அருணாசலம், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் பிச்சையா, சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் ராஜராஜன், மாவட்ட சிறுபான்மை அணி அமைப்பாளர் மைதீன், மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் பொன்னுதுரைச்சி, தகவல் தொழில் நுட்ப அணி ஆனந்தராஜ், நகர இளைஞரணி அடைப்பாளர் வழக்கறிஞர் சதீஸ், கவுன்சிலர்கள் கவிதா,கார்த்திகா, வள்ளி அண்ணாமலை, பீவி பாலசுப்பிரமணியன் பொறுப்பாளர் பரமசிவம், எஸ்றா, முருகேசன், கலை இலக்கிய பிரிவு துணை அமைப்பாளர் மணிமாறன், மீனாட்சி சுந்தரம், ஞானபண்டிதன், கார்த்திகேயன், முத்தையா, கருத்தப்பாண்டி, வெற்றி, கட்சி நிர்வாகி கள் தொண்டர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.




■ திருப்பூர் மாவட்டம் உடுமலை வட்டம் பள்ளபாளையம் ஊராட்சியில் ஒன்றிய பொது நிதியில் கான்கிரீட் சாலை அமைத்தல், பைப் லைன் அமைத்தல், மழை நீர் வடிகால் அமைத்தல் ஆகிய பணிகளுக்கான பூமி பூஜை பணிகளை பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினரும், திருப்பூர் தெற்கு மாவட்ட கழக பொறுப்பாளர் கே.ஈஸ்வரசாமி தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் பாபு மாவட்ட அவை தலைவர் ஜெயராமகிருஷ்ணன், மாவட்ட கலைப்பிரிவு பேரவை அமைப்பாளர் எஸ்பால சுரேஷ், மாவட்ட பொருளாளர் அணி அமைப்பாளர் ஜெயக்குமார், மாரிமுத்து மற்றும் வட்டார வளர்ச்சி துறை அதிகாரிகள், கழக நிர்வாகிகள், சார்பணி நிர்வாகிகள், ஊர் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# பெட்டைகுளத்தில் முதல்வர் ஸ்டாலின் பிறந்தநாள் விழா: பட்டாசு வெடித்து, இனிப்பு வழங்கி கொண்டாட்டம்

திசையன்விளை மார்ச். 3-

தமிழக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களின் 73 வது பிறந்தநாளை முன்னிட்டு, திருநெல்வேலி கிழக்கு மாவட்ட நெசவாளர் அணி சார்பில் திசையன்விளை அருகிலுள்ள பெட்டைகுளத்தில் உற்சாகமான கொண்டாட்டங்கள் நடைபெற்றன. விழாவிற்கு, மாவட்ட நெசவாளர் அணி துணை அமைப்பாளரும் (PLA-2), ஒன்றிய பிரதிநிதியுமான எம். ஞானராஜ் தலைமை தாங்கி ஏற்பாடுகளைச் செய்திருந்தார். விழாவில் பட்டாசுகள் வெடிக்கப்பட்டு, பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டன. "திமுக ஆட்சி தொடர வேண்டும்" எனப் பொதுமக்கள் மகிழ்ச்சியுடன் வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.



நிகழ்வில் முன்னாள் மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் பிரகாசம், மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் நாராயணன், கிளை கழக செயலாலர்கள் பெட்டைகுளம் சேவியர், தாஜுதின், வடக்கு பெட்டைகுளம் ஜாவாகிர், ஒன்றிய பிரதிநிதி புலிகுளம் கார்த்திக், பாக்கியம் கிளை செயற்குழு உறுப்பினர்கள் ஜெபமணி, முத்துராஜ், பேதுரு மற்றும் கழக நிர்வாகிகள்பொது மக்கள் கலந்து கொண்டு விழாவினைச் சிறப்பித்தனர்.




# புளியங்குடி சாய்நிகேதன் சி.பி.எஸ்.இ பள்ளியில் கோலாகலமான விளையாட்டு தின விழா

புளியங்குடி,மார்ச்.3-

தென்காசி மாவட்டம் புளியங்குடி எஸ்.வி.சி சாய்நிகேதன் சி.பி.எஸ்.இ பள்ளியில் விளையாட்டு தின விழா நடைபெற்றது. விழாவில் எஸ்.வி.சி கல்வி குழுமத்தின் தலைவர் டாக்டர் முருகையா தலைமை தாங்கினார். பள்ளி இயக்குநர் கலையரசன் முன்னிலை வகித்தார். பள்ளி முதல்வர் நாகலட்சுமி வாழ்த்துரை வழங்கினார்.

சிறப்பு விருந்தினராக மனோன்மணியம் பல்கலைக்கழக உடற்கல்வி மற்றும் விளையாட்டு துறை இயக்குநர் டாக்டர். ஆறுமுகம் பங்கேற்று, மாணவர்களின் அணிவகுப்பு மரியாதையை ஏற்று, ஒலிம்பிக் தீபத்தை ஏற்றி வைத்து, விளையாட்டு விழாவைத் தொடங்கி வைத்து பேசுகையில், 'மாணவர்கள் தினசரி வாழ்க்கையில் விளையாட்டை ஒரு பகுதியாக்கிக் கொள்ள வேண்டும். அது ஆரோக்கியத்தையும் அறிவாற்றலையும் அதிகரிக்கும் என்றார். விழாவில் மாணவர்களுக்குக் கபடி, வாலிபால், பந்து எறிதல், தடகளப் போட்டிகள், ஓட்டப்பந்தயம், நீளம் தாண்டுதல், எடை எறிதல் உட்பட பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு, வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்குக் கோப்பைகள், பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. தொடர்ந்து மாணவர்களின் பிரமிடு, சிலம்பம், சுருள் வாள், வாள் வீச்சு போன்ற சாகசங்கள், கலை நிகழ்ச்சிகள் நடந்தது. விழாவில் ஆசிரியர் ஆசிரியைகள், அலுவலகப் பணியாளர்கள், பெற்றோர்கள், மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.



# தென்காசியில் பிளஸ் 2 பொதுத்தேர்வு 16,000 மாணவர்கள் பங்கேற்பு ஆட்சியர் அதிரடி ஆய்வு

தென்காசி மார்ச். 3-

தென்காசி மாவட்டத்தில் 202526 ஆம் கல்வியாண்டிற்கான மேல்நிலை இரண்டாமாண்டு (பிளஸ் 2) பொதுத்தேர்வுகள் நேற்று (02.03.2026) முதல் தொடங்கியுள்ளன. இ.சி.ஈஸ்வரன்பிள்ளை அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மற்றும் மஞ்சம்மாள் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளிகளில் அமைக்கப்பட்டுள்ள தேர்வு மையங்களுக்குச் சென்ற ஆட்சியர், அங்கு மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அடிப்படை வசதிகள் மற்றும் தேர்வு நடைமுறைகளைப் பார்வையிட்டார். மாவட்டம் முழுவதும் மொத்தம் 69 மையங்களில் தேர்வுகள் நடைபெறுகின்றன. பங்கேற்ற மாணவர்கள்: 154 பள்ளிகளிலிருந்து மொத்தம் 16,222 மாணவ, மாணவிகள் விண்ணப்பித்திருந்த நிலையில், முதல் நாளில் 16,087 பேர் தேர்வில் பங்கேற்றனர். 133 மாணவ, மாணவிகள் தேர்வு எழுத வரவில்லை; 2 மாணவர்களுக்குத் தேர்வு எழுதுவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

*இரும்புக்கரம் கொண்ட கண்காணிப்பு:*தேர்வு முறைகேடுகளைத் தடுக்கவும், அமைதியான முறையில் தேர்வை நடத்தவும் மாவட்ட நிர்வாகம் பலத்த ஏற்பாடுகளைச் செய்துள்ளது. 69 முதன்மை கண்காணிப்பாளர்கள், 72 துறை அலுவலர்கள் மற்றும் 1,010 அறைக் கண்காணிப்பாளர்கள் பணியில் உள்ளனர்.92 நிலையான படை உறுப்பினர்கள் மற்றும் 4 பறக்கும் படை உறுப்பினர்கள் தீவிரக் கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.17 வழித்தடங்களில் ஆயுதம் தாங்கிய காவலர்களின் பாதுகாப்புடன் வினாத்தாள்கள் பாதுகாப்பாகக் கொண்டு செல்லப்படுகின்றன. தென்காசி மாவட்டத்திற்கான சிறப்பு கண்காணிப்பு அலுவலராக இணை இயக்குநர் (கள்ளர் சீரமைப்புத்துறை) எம்.கே.சி.சுபாஷினி நியமிக்கப்பட்டுள்ளதாக, மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார். இந்த ஆய்வின் போது மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் ரேணுகா உள்ளிட்ட அதிகாரிகள் உடனிருந்தனர்.



# "விஜய் அனுபவம் குறைந்தவர்தான்; குறையும் இருக்கிறது" நாஞ்சில் சம்பத்

சிவகங்கை, மார்ச்.3-

விஜய் அனுபவம் குறைந்தவர் தான்; அவரிடம் குறையும் இருக் கிறது என, தவெக கொள்கை பரப்புச் செயலாளர் நாஞ்சில் சம்பத் தெரிவித்தார். சிவகங்கையில் தவெக கொள்கை விளக்கப் பிரச்சாரக் கூட்டம் நடைபெற்றது.

அதில் நாஞ்சில் சம்பத் பேசியதாவது: திமுகவுக்கு எதிராக தொலைக்காட்சியை உடைத் தார் கமலஹாசன். அந்த கட்சி அறிவாலய வாசலில் படுத்துக் கிடக்கிறது. திமுக, அதிமுகவுக்கு மாற்றாக வந்தவர்கள் பாதியிலேயே முடங்கிவிட்டனர். ஆன்மிக அரசியல் என்று சொன்ன ரஜினி காந்தால் வர முடியவில்லை.

ஆனால், எங்கள் ஸ்டாராக விஜய் வந்துள்ளார். விஜய்க்கு கூடும் கூட்டம் வாக்காக மட்டும் அல்ல வேட்டாகவும் மாறும். விஜய் அனுபவம் குறைந்தவர்தான், அவரிடம் குறையும் இருக்கிறது. ஆனால், அவரது வருகை உங்களை ஆத்திரப்பட வைக்கிறது.

தனிநபர் விமர்சனத்தை முன் வைக்கிறீர்கள். இது மிக மோசமான, மட்டமான, மலிவான அரசியல். விஜய்யை களங்கப்படுத்தவும் முடியாது, கறைப்படுத்தவும் முடியாது. பழனிசாமி விரைவில் பாஜகவில் சேர்ந்துவிடுவார். இவ்வாறு அவர் பேசினார்.










SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000